1975 நவம்பர் 11]

## இரும்பொறை—பெரிய கொமாரபாளையம் சாலை

* 297 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, இரும்பொறையிலிருந்து பெரியகொமாரபாளையம் செல்லும் பாதையினை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சீத்தக்காட்டனூரில் கிணறுகள் வெட்டுதல்

*298 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்திலுள்ள, சீத்தக்காட்டனூர் பொதுமக்களுக்கு குடிநீர் கிணறு வெட்ட டெண்டர் டிபாசிட் தொகை ஏதேனும் ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டதா ?

(இ) ஆம் எனில், மேற்படி கிணறு வெட்டப்படாமல் இருப்பதற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மேற்படி பணிக்குக் கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளி ஒரே ஒப்பந்தப் புள்ளியாக இருந்தமையால், ஒப்பந்தப் புள்ளிக்கு உதவிப் பொறியாளர் ஒப்புறுதி அளிக்கவில்லை. இவ்வாண்டிலோ அல்லது அடுத்துவரும் நிதி ஆண்டிலோ இப்பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சீத்தக்காட்டனூரில் உள்ள கிராமப் பொதுமக்கள் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் மிகவும்

சிரமப்படுகிறார்கள். ஒப்பந்தப் புள்ளி பலர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒன்றிய நிதியிலிருந்தே இந்த கிணற்றை வெட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** காலதாமதமாவதற்குக் காரணம் டெண்டர்கள் கோரப்பட்டும் ஒரே ஒருவர்தான் டெண்டர் கேட்டிருக்கிறார் என்ற காரணத்தினாலேதான். மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் இது இருப்பதால் அவர் பல டெண்டர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன்.

### மணி அய்யனார் கோயில், முருகமங்கலம்

*299 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் முருகமங்கலம் பகுதியிலுள்ள அருள்மிகு மணி அய்யனார் கோயிலை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின கீழ் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) & (இ) மாயூரம் வட்டம், முருகமங்கலம் அருள்திரு ஸ்ரீ மணி அய்யனார் திருக்கோயில் 1974 ஆம் ஆண்டில் சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள்

*300 வினா—**திரு. எஸ். வடிவேல்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் 13—3—1973 அன்று குறுகிய கால வினா எண். 3-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலூகா வீதிவிடங்கன் கிராமத்தில், புதையலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் பற்றிய வழக்கு முடிவடைந்துவிட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள தொடர் நடவடிக்கை என்ன?